# வட ஆற்காடு ஜில்லா சு-ம- மகாநாடு

3ம் பக்கத் தொடர்ச்சி.

டைமுடிச்சியுடன் இங்கிலாந்து தேசத்தை நோக்கி ஓட்டம் பிடித்து விடுவார்களென்றும், அப்போது நம்நாட்டில் ராமராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு வரி வழக்கு இல்லாமல் தேனும் பாலும் கரை புரண்டோடப் போகிறதென்றும் இப்படியெல்லாம் சொல்லி ஏமாற்றி கிராமங்கள் தோறும் தெருக்கள்தோறும் கூலிகளை விட்டு கூப்பாடு போட்டார்கள். பாமரமக்கள் இதைஉண்மையென்று நம்பி மஞ்சள் பெட்டியில் ஓட்டுப் போட்டு நிறப்பினார்கள். அதன் பயனாய் இன்று நாம் திருடப் போனயிடத்தில் தேள்கொட்டிய திருடனைப்போல் விழித்து நிற்கிறோம். நாம் ஏமாந்துவிட்டதை இப்போது தெரிந்துக் கொண்டோம். அந்த காலத்தில் நம் தலைவர்களும் நமதியக்கப் பத்திரிகைகளும் செய்த எச்சரிக்கைகளை நாம் கொஞ்சமும் கவனிக்காது பார்ப்பனர் வாலைப்பிடித்து திரிந்தோம். ஆயினும் நம் கண்மூடித்தனத்தால் ஏற்பட்டபலனை இப்போது அநுபவிக்கிறோம். சீர்திருத்தத்தை அடைக்கவே சட்டசபைகளுக்கு போகிறோமென்று வாக்குறுதிகொடுத்த காங்கரஸ்காரர்கள் தங்களுக்கு மெஜாரிட்டிகிடைத்ததும், வெள்ளைக்கார கவர்னர் பாதத்தில் சரணாகதியடைந்து சத்தியம் (ராஜவிஸ்வாசப்பிரமாணம்) செய்துக் கொடுத்துவிட்டு உத்தியோகம் ஏற்றுக்கொண்டார்கள். பார்ப்பனர்களே பெருவாரியாய் மந்திரிகளாகிவிட்டார்கள். தங்கள் இனத்தாருக்கும் அடியார்களுக்கும் சில உத்தியோகங்களை கொடுத்தார்கள். அது மாத்திரமல்லாமல் சட்டசபை அங்கத்தினர்களுக்கெல்லாம் சம்பளம் பங்கிட்டுக்கொடுத்து அவர்களை பேசாமடைந்தைகளாயிருக்க வாய்பூட்டுப்போட்டு தங்கள் காரியங்களை எதேச்சாதிகாரமாய் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தப்படி சம்பளங்களை பங்கிட்டுக் கொண்டு, ஜஸ்டிஸ் கட்சியாரை உத்தியோக வேட்டைக்காரர்களென்று புலம்பித்திருந்த காங்கரஸ்காரர்கள் இப்போது பக்கா உத்தியோக வேட்டைக்காரர்களாகி விட்டார்கள்.

## ஹிந்திப் பிரச்சினை.

இவ்விதமாய் பார்ப்பனர்கள் உத்தியோக வேட்டையாளுவது [illegible], ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திலிருந்தபோது பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக செய்துவைத்த ஏற்பாடுகளையும் சட்டங்களையும் புறக்கணித்துவிட்டு பழையபடி உத்தியோகங்களையும் பதவிகளையும் பார்ப்பனரே ஏகபோகமாய் அனுபவித்துவர அநேக சூழ்ச்சிகளை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். [illegible] செய்யும் சூழ்ச்சிகளில் ஹிந்தி படிப்பை கட்டாய[illegible]வதுதான் முதன்மையாயிருக்கிறது. இதை கண்டிப்பாய் அரசியல் சூட்சி என்றுதான் சொல்லவேண்டும். எப்படியெனில், பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையாயிருந்துவந்த அரசியல் ஆதிக்கம் ஜஸ்டிஸ் கட்சியாரின் பெருமுயற்சியால் ஒருவாறு ஒழிக்கப்பட்டு பார்ப்பனரல்லாத தமிழ் மக்கள், ஆந்திரர்கள், முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள், ஒடுக்கப் பட்டோர்கள் ஆகிய எல்லோரும் உயர்தர கல்வியில் தேர்ச்சி பெறவும், பெரிய பெரிய பதவிகள் பெறவும் சாதகமாகி விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திலிருந்தபோது உத்தியோக நியமனங்கள் விஷயமாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை சட்டபூர்வமாக செய்து வைத்துவிட்டார்கள். இன்று காங்கரஸ் பார்ப்பனர்களின் ஆட்சி ஏற்பட்டுவிட்டபோதிலும் ஜஸ்டிஸ் கட்சியார் செய்த வகுப்புவாரி முறை உத்திரவை எடுத்துவிடுவது சுலப சாத்தியமான காரியமல்ல. ஏனென்றால் மேற்கண்ட வகுப்புவாரி உத்திரவை காங்கரஸ் மந்திரிகள் எடுத்துவிட முயன்றால் இப்போது காங்கரஸ் கட்சியில் உள்ள பார்ப்பனரல்லாதார்கள் விழிப்படைந்து கட்சியிலிருந்து டேக்கர் கொடுத்துவிடுவார்களென்னும் அச்சம் பார்ப்பனர்களுக்கு அதிகமாயிருக்கிறது. ஆகவே ஏதாவது ஒரு தந்திரம் செய்து அந்த வகுப்புவாரி ஜி. ஓ. (G. O.)வை ஒழிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். அந்த உத்திரவு எப்படி உடைபடுமென்றால், இப்போதைக்கு சுமார் 10-ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டில் ஹிந்திபிரசார சபையென்று ஒன்றை தோற்றுவித்து அதற்கு காங்கரஸ்காரர் கொள்ளை கொண்ட திலகர் நிதியிலிருந்து சில தொகை செலவு செய்து அதன் மூலமாக அநேக பார்ப்பனர்கள் ஹிந்தியை கற்றுக்கொண்டு பிழைப்புக்கு வழியில்லாமல் அலைந்து திரிகிறார்கள். இப்போது ஹிந்தியை கட்டாயபாடமாக்குவதை நாம் ஒப்புக்கொண்டு சட்டமும் செய்யப்பட்டால் பள்ளிக்கூடங்களுக்கு பல்லாயிரக்கணக்கான ஹிந்தி உபாத்தியபயர்கள் தேவைப்படும். ஆகவே ஹிந்திபடித்த பார்ப்பனர்களுக்கெல்லாம் உபாத்தியாயர் வேலை கிடைப்பது நிச்சயம். அப்போது வகுப்புவாரி உத்திரவை எடுத்துக் காட்டிப் போராடினால் மந்திரிகள் நாங்கள் என்னசெய்வோம், ஹிந்திபடித்த தமிழர்கள் முஹம்மதியர்கள், கிறிஸ்தவர்கள். ஒடுக்கப்பட்டோர்களிருந்தால் உபாத்தியாயர்களாய் நியமிக்கஆட்சேபனையில்லையென்று சொல்லி தப்பித்துக்கொள்ள சுலபமான வழி உண்டாகிறது. ஒரு முறை கிரியாம்சத்தில் வகுப்புவாரி உத்திரவை ஒழித்துவிட்டால் அப்படியே சிறிது சிறிதாய் அவ்வுத்திரவின் உயிரை கொல்லாமலே கொன்றுவிடலாம் என்பதுதான் ஹிந்தி படிப்பை கட்டாயமாக புகுத்தும் சூட்சி. இன்று ஹிந்தியை கட்டாயபாடமாக்கவிட்டு விட்டால் நாளை ஹிந்தி படித்தவனுக்குத்தான் உத்தியோகம் என்று உத்திரவு போட்டுவிடுவார்கள். தமிழர்களும் மற்ற பார்ப்பனரல்லாத மக்களும் ஹிந்தியை பயில்வது சுலபமான காரியமல்ல. ஹிந்தி என்பது இப்பக்திபாஷை. அதற்கென்று தனியாய் இலக்கண இலக்கியம் கிடையாது. அது சமஸ்கிருதத்திலிருந்து சிதருண்ட பாஷை. ஹிந்தியை பார்ப்பனர்கள் சுலபமாக கற்றுக் கொள்ளமுடியும். அதற்கு காரணம் அவர்கள் நம்மிலும் சிறந்த அறிவாளிகளென்பதல்ல, பின் எதனாலென்றால் அவர்கள் சமஸ்கிருதத்தை பரம்பரையாக [illegible] செய்து பயிற்சி பெற்றவர்கள். அதோடு சமஸ்கிருத எழுத்துக்களே ஹிந்தியின் எழுத்துக்கள் தவிரசமஸ்கிருதவார்த்தைகளின்ஒலிபேசற்றுசிதைவு பெற்று ஹிந்தியின் ஒலியாக இருக்கிறது. ஆகவே பார்ப்பனர்களுக்கு ஹிந்தி கற்பது அவ்வளவு கடினமல்ல பார்ப்பனரல்லாத பிள்ளைகள் ஹிந்தி பாடங்களில் பூஜ்யம் வாங்குவது உறுதி. மூன்றாவது பாரத்தில் உயர்தர மார்க்குகள் வாங்கினால்தான் மேல்படிப்புக்கு அதாவது உத்தியோகங்களுக்கான படிப்பு படிக்கலாமென்று மற்றொரு கட்டாயமும் ஹிந்தியோடு தொடரப்போவது நிச்சயம். இதன் முடிவு 3-வது பாரத்திற்குமேல் தமிழர்களை படிக்க லாயக்கு இல்லாமல் செய்துவிட்டால் பிறகு உத்தியோகங்களைவகிக்க பார்ப்பனர்களைவிட யார் இருக்கிறார்கள் என்பதை பார்த்துவிடலாம் என்பதற்காகவே பார்ப்பனர்கள் ஹிந்தியை கட்டாயபாடமாக்க முயசிக்கிறார்கள். ஆகவே பார்ப்பனரல்லாத பிள்ளைகள் 3-வது பாரத்திற்கு மேல் படிக்க சாத்தியமில்லாமல் பழையபடி கூலிவேலை செய்யவும், ஏர் ஓட்டவும், மாடு மேய்க்கவும் சேவகு செய்யவும் அல்லது பிழைப்பில்லாமல் திண்டாடவுந்தான் லாயக்காக இருக்கப் போகிறார்கள். இதற்கெல்லாம் மேலாக நமது தாய்ப்பாஷையாகிய தமிழை அடியோடு கொலை செய்யவும்முயன்றுவிட்டார்கள். ஆகவே நமது தமிழ் அன்னைக்கு போராபத்து நேரிட்டிருக்கிறது. தமிழ் நமது உயிர், தமிழனாய்ப் பிறந்தோம், தமிழனாய் வளர்ந்தோம். தமிழனாய் பிழைத்தோம், தமிழனாகவே நாம் சாக வேண்டும். ஹிந்தி பிரச்சினையைக் கேட்டு நம் தமிழ் நாடே திடுக்கிட்டு விட்டிருக்கிறது. இது சமயம் நாம் கண்மூடிக் கொண்டிருக்கக் கூடாது. ஹிந்தியை எப்படியாவது கட்டாயபாடமாக்க நமது முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியார் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறார். இதை நாம் லேசாகமதித்து விடக்கூடாது. இது தமிழர்களுக்கு தான் சம்பந்தமென்றிருக்கக் கூடாது. தமிழர்களுக்கு எப்படி ஆபத்தோ அப்படியே தான் முஸ்லீம் சமுகத்தாருக்கு கிறிஸ்தவ சமூகத்தாருக்கும் இதர பார்ப்பனரல்லாத மக்கள் அனைவருக்கும் பேராபத்தாயிருக்கிறது. ஹிந்தியில் மார்க்கு வாங்காதவனுக்கு மேல் படிப்பில்லை. உத்தியோகமில்லையென்று ஏற்பட்டால் இது எல்லா பார்ப்பனரல்லாத மக்களையும் நசுக்குவதாக இருக்கிறது. ஆகையால் இங்கு குழுமியிருக்கும் பார்ப்பனரல்லாக இந்து முஸ்லீம் சகோதரர்களே! தோழர்களே! நீங்களெல்லால் ஒன்றுபட்டு ஏகமுகமாய் ஹிந்தியை எதிர்க்க வேண்டும். இப்போதிருக்கும் காங்கரஸ் ஆட்சியென்று சொல்லப்பட்ட புரோகித ஆட்சி, பெருமாள் கோவில் மணியாட்டி ஆட்சியை தலையெடுக்கவொட்டாமல் செய்தே தீரவேண்டும். அப்படி நாம் செய்யாவிட்டால் நாம் உயிருடனிருந்தும் பிரயோஜனமில்லை. ஹிந்தி எமன் நம் மீது படை எடுக்கப்போகிறான். நீங்கள் வீராவேசத்தோடு அந்த எமனை எதிர்க்கத் தயாராயிருக்கவேண்டும்அவசியமானால் காங்கரஸ்காரர் கற்றுக்கொடுத்த சத்தியாக்கிரகத்தை கையாள வேண்டும். நாம்இருந்தாலும்சரி, இறந்தாலும்சரி, உயிரற்ற இப்பந்தி, லம்பாடியர் பாஷையாகிய ஹிந்தியை நாம் கட்டாயம் எதிர்த்து போராடவேண்டும்.

## முடிவுரை.

தோழர்களே! நாம் இப்போது மிகவும் நெருக்கடியான நிலைமையிலிருக்கிறோம். மேற்சொன்ன காரணங்களால் நாம் இன்னமும் விழிப்படையாமல் தூங்கிக்கொண்டே இருப்போமானால் நாம் இதுவரையில் அடைந்த முன்னேற்றத்தையும் இழந்து பார்ப்பன தொல்லையிலகப்பட்டு என்றென்றைக்கும் தலை எடுக்காதபடி நசுக்கப்பட்டுவிடுவோம். ஆகையால் நமது மாபெரும் தலைவர் ராமசாமி பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு உண்மை நிலையறிந்து நமதியக்கம் விர்த்தியடையவும், நமதியக்கப் பத்திரிகைகளான "குடி அரசு" "விடுதலை" "ஜஸ்டிஸ்" "சைபுல் இஸ்லாம்" "ரகாதுகன்" முதலிய பத்திரிகைகளை ஆதரித்தும் நாம் சுயமரியாதையோடு வாழ வேண்டிய தீர்மானங்களைச் செய்து கிராமங்கள்தோறும் பிரசாரம் செய்து பாமர மக்களுக்கு உண்மை நிலை இன்னதென்று எடுத்துக் காட்டி பார்ப்பன சூட்சிகளை நம் முழு பலத்துடன் எதிர்த்துப்போராட வேண்டிய தீர்மானங்களை செய்ய நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அப்படிச் செய்ய முக்கியமாய் இந்த ஜில்லாவில் முக்கியமாய் இந்து முஸ்லீம் ஒற்றுமை மிகவும் அவசியமாகவிருக்கிறது. நமதியக்கத்தையும் இந்த மகாநாட்டையும் முஸ்லீம் சகோதரர்களும் ஆதரிக்க முன் வந்திருப்பதே நம் வெற்றிக்கு அறிகுறியாகும். ஆகையால் இங்கு கூடியிருக்கும் மகா ஜனங்கள் மேற்கண்ட விஷயங்களை யோசித்து தக்க தீர்மானங்களைச் செய்ய வேணுமாய் உங்களை அதிவினயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் அழைப்புக்கிணங்கி இங்கு பெருவாரியாய் குழுமியுள்ள இந்து முஸ்லீம் தோழர்கள் அனைவரையும் வரவேற்பு கழகத்தார் சார்பாக மறுமுறையும் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றேன்.